# கரிசல் நிலப் பண்பாட்டில் ஆடுகள் (கிடை குறுநாவலை முன்வைத்து)

***ஜெ. ஜோதிமணி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383258

**முன்னுரை**

*மனிதனின் அறிவார்ந்த நிலையில் வாழ்வியலை வகைப்படுத்த முனைந்தபோது முதலில் நிலத்தைதான் மையப்படுத்துகிறான். முந்து நூலான தொல்காப்பியத்திலும் முதற்பொருளாக நிலமும் பொழுதும் தான் அமைகிறது. மனித வாழ்வின் அடிப்படை முதல் ஆதாரமாக விளங்குவது நிலம். நிலக்கூறுகளின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணைவாழ்வியலை அடையாளப்படுத்தி அறிய முடிகிறது. ஒவ்வொரு நிலத்திற்குமான பண்பாடு இலக்கியங்களின் வாயிலாக வெளிப்பட்டு நிற்கிறது. விலங்குகளை வேட்டையாடிய மனிதன், விவசாயத்தை அறியும் போது விலங்குகளைப் பழக்க ஆரம்பித்தான். அவற்றில் கால்நடைகளான காளைகள், எருதுகள், ஆடுகள் போன்றவை மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவை நிலம் பண்படுத்துதலிலும் பயிர் விளை வித்தலிலும் மானுட உயிர்ப்பெருக்கத்திலும் இன்றியமையாத பெரும்பங்கில் துணை நிற்பன. கிடை என்ற குறுநாவல் கூறும் கரிசல் நிலம் சார்ந்த பண்பாட்டில் ஆடுகளின் பங்களிப்பை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**ஆடு வளர்த்தல்**

*தமிழர்களின் திணை வாழ்வியல் பண்பாட்டில் ஆடுகளை வளர்ப்பது சங்க காலம் தொட்டு இருந்து வந்துள்ளது. இருளில் ஆடுகளை ஒன்றாகத் தொகுத்து, பனையால் செய்யப்பட்ட குடலையைத்தன் முதுகில் போட்டுக்கொண்டு வரும் இடையன் குறித்தும், காட்டில் இடையன் ஆட்டு மந்தையை ஒருசேரக் கூட்டுவதற்காக வாயை மடித்து வீளை எழுப்புவதையும் அகநானூற்றில் நன்பலூர்ச் சிறு மேதாவியார் பாடியுள்ளார்.*

***மறித் துரூஉத் தொகுத்த பறிப் புற இடையன்***
***(அகம்.94-4)***
***காடுஉறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்***
***(அகம் 394-13)***

*ஆடுகளைக் கவர்ந்து செல்லக் காத்திருக்கும் குறுநரிகளிடமிருந்து அதனைக் காப்பாற்ற நாவை மடித்து வீளை இசைக்கும் இடையன் பற்றி இடைக்காடனார் பாடியுள்ளார்.*

***தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்,***
***மடிவிடு வீளை கடிதுசென்று இசைப்ப,***
***தெறிமறி பார்க்கும் குறுநரி வெரீஇ***
***(அகம்.274-8-10)***

*முல்லை நில மக்கள் வாழ்வில் ஆநிரைகளும் ஆடுகளும் இன்றியமையாப் பங்கினை வகித்தமைக்கு மேற்காண் அகப்பாடல்கள் சான்றாக அமைவதைக் காண முடிகிறது.*

**கரிசல் நிலத்தில் ஆடுகள்**

*மதுரையின் தென்பகுதியில் அமைந்த திருமங்கலத்திலிருந்து திருநெல்வேலியின் வடக்குப் பகுதி கங்கை கொண்டான் வரை அமைந்த நிலப்பகுதி கரிசல் நிலமாகும். இந்நிலப்பகுதியான இடைசெவலில் பிறந்தவர் கி.ராஜநாராயணன். கரிசல் வட்டார இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்*

படுகிறார். இவருடைய ஒரு குறுநாவல் கிடை. ஆடுகளை வளர்க்கும் சமூகத்தைப் பற்றியதாக இந்நாவல் அமைகிறது. ஆடுகளின் வகைமைகளாக,

**பள்ளை ஆடு, சீனி ஆடு, நரிப்பள்ளை ஆடு, வேலி ஆடு, ஓங்கோல் ஆடு**

**(கி.ராஜநாராயணன், கிடை, ப.8)**

ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். தமிழ்ச் சமூகத்தில் பெரும்பாலும் வெள்ளாடு, செம்மறி ஆடு என்ற பேதங்களை மட்டும்தான் பெரும் பான்மையினர்அறிவர். ஆனால் ஆடுகளுக்குள் பல வகை உண்டு. கிடை நாவலின் கதாப் பாத்திரங்கள் வழி கி.ராஜநாராயணன் பட்டியல் போடும் ஆடுகள் பல.

செவ்வாடு, அரியாடு - இவைகள் தனி சுத்தச் ‘சிகப்பு’. கருங்காத்து வெள்ளை கருப்பு- உடம்பு பூராவும் வெள்ளை; காதுகள், செங்காத்து வெள்ளை, வெங்காலாடு - தனி ஒரு நிறத்தில், காலில் மட்டும் ஒரு புள்ளி. மறை - தனி ஒரு சுத்த நிறத்தில், ஒரு பட்டை வேற்று நிறம். போர் - இரண்டு நிறங்கள் கலந்து காணுவது. கரும்போர். செம்போர். வெள்ளைப் போர். தவிட்டுப் போர். மூளி - காது குறை. தாலி கழுத்தின் கீழ் இரண்டு தொங்கட்டான்கள். கூளி -வளர்ச்சி குன்றிய குட்டை. கறுவி - உடம்பு சிகப்பு: அடிவயிறு மட்டும் கருப்பு. ராயாடு போர். உடம்பு சிகப்பு; அடிவயிற்றுக் கருப்பில் வெள்ளைப் போர். சென்றாயாடு சிகப்பு உடம்பில் அடிவயிற்றுக் கருப்பில் செம்போர்.

கரிசையாடு - கருப்பு மிஞ்சின சிகப்பு. கரிசைப் போர். கண்ணாடிப் போர் - கருப்பு மிஞ்சின சிகப்பில் வெள்ளைப் போர். கம்பளியாடு கருப்பு மிஞ்சின சிகப்பில், துடைகளிலும் முன் சப்பையிலும், முதுகு எலும்பு, புருவங்களிலும் தாரை தாரையாக கருப்புக் கோடுகள். சுட்டி - தலையில் வெண் புள்ளி. வெண்தலை. கொப்பாடு - கொம்பு இருக்கும் பெண் ஆடு. கிடா - கொம்புள்ளது; ஆண். மோளைக்கிடா கொம்பில்லாதது. கொச்சைக்கிடா விதையில்லாதது; பிறவியிலேயே. (மேலது பக்.13,14)

கருத்தாடு. மறை. போர். கோட்டை மறை - உடம்பைச் சுற்றி ஒரு வேற்றுநிற வட்டம். சுட்டி. பூவால் - வாலின் முனையில் வெள்ளை. தாலி. பூலி காதுக் கருப்பில் வெள்ளைப் புள்ளிகள். கன்னி - கால், கண்பட்டை, அடிவயிறு முதலியதில் வெள்ளைக் கோடுகள். பால் கன்னி. செவலைக் கன்னி. தவிட்டுப் போர் - தனி ஒரு நிறத்தில் நாலு நாலு ரோமங்களாய் வெள்ளை. சாம்பல் போர். மொட்டை. குடைக் கொம்பு. உச்சிக் கொம்பு. ஒத்தைக் கொம்பு. மாடக் கொம்பு. மூஞ்சி வெள்ளை. நெத்திச் சுட்டி. செவலைப் போர். மச்சை - தனி நிறத்தில் மச்சம். குரா - இளம் வயது. சுணக்கி - புள்ளிமான் மாதிரியான நிறம். நரை ரோமம் கருப்பும் வெள்ளையும் கலவன். குருட்டாடு -ஒற்றைக் கண் தெரியாதது. சொட்டைக் காது - சிறிய சுருங்கிய காதுகளை உடையது. துடை மறை. ஓங்கோல் - நீண்ட தொங்கட்டான் காதுகள். புளியம்போர் - புளியம் பூவைப் போல நிறம். (மேலது பக்.15,16,17) என இத்தனை வகை ஆடுகளின் வகைமையை அதன் நிறம், வடிவம், அமைப்பு, உடல் வாகு கொண்டு ஆடு மேய்ப்பவர்கள் அடையாளங் கண்டு கொள்ளும் தன்மையைச் சுட்டியிருக்கிறார்.

### விவசாய நிலப் பண்படுத்தலில் ஆடுகள்

இந்திய நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படை விவாசயம் ஆகும். விவசாயம் உள்ளவரையில் தான் நாடும் நாட்டு மக்களும் தன்னிறைவு பெற்றவர்களாக வாழ முடியும். தொல் தமிழரின் விவாசயம் என்பது இயற்கை வேளாண்மையைஅடிப்படையாகக் கொண்டது. உழவு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வேளாண்மையின் சிறப்பை விளக்கியுள்ளார். உழவு என்ற சொல் உழுதல் என்ற செயல் பாட்டிலிருந்து தோன்றியது. உழுவதற்கு முன் நிலத்தில் எருவிடுதல் இயற்கை வேளாண்மையின் அங்கம். எருவிடுதலின் சிறப்பைக் குறித்து,

*ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு (குறள்.1038)*

என்கிறார் வள்ளுவர். எரு என்பது ஆடு, மாடு, எருமைகளின் சாணத்தின் வறண்ட தன்மையாகும். எருதுகளைக் கட்டி உழுதலில் பயன்படுத்தும் போது அவை இடும் பசுஞ் சாணத்துடன் உழப்படுகிறது. ஆடுகளின் எருக்களை நிலம் முழுக்க பரவச் செய்ய அறுவடை காலம் முடிந்த பின் ஆடுகளைப் பட்டி போட்டு வைப்பது கிடை எனப்படுகிறது. கிடை என்பது ஒரு தனி ராஜ்யம் அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவன் உண்டு. அந்த தலைமை ஸ்தானாதிபதியின் பெயர்தான் 'கீதாரி' என்பது. கிடைக்கு என்று ஏற்பட்ட பூர்வீக வழிவந்த சில சட்ட திட்டங்கள் உண்டு. அதை யாருமே கொஞ்சம் கூட மீறக்கூடாது. ஆட்டுக்குட்டிகளின் கூடுகளை வரிசைப்படுத்தி வைப்பதற்குக்கூட ஒரு முறை உண்டு. அதற்கு 'வட்டம்' என்று பெயர். நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்கும் கிடைக்கூலியான தானியத்தைக் கிடைக் காரர்கள் இந்த வரிசை முறைப்படிதான் வாங்கிக் கொள்ள வேண்டும். கிடைக்காரர்களுக்கு என்று ஒரு தனிச் சொற்கள் போட்டுப் பேசப்படும் 'மொழி' யே உண்டு. ஈடுபட்டவர்களுக்குத்தான் அது புரியும்! (கி.ராஜநாராயணன், கிடை, ப.12) என்று கிடை அமைப்பைப் பற்றி நாவலில் குறிப்பிடப்படுகிறது. கிடை அமைப்பதன் முக்கிய நோக்கம் அறுவடை நிலத்தைப் பண்படுத்துவதில் ஆடுகளின் புழுக்கை, சிறுநீர் முக்கியப் பங்காற்றுவதாகும்.

## மருத்துவப் பயன் தரும் ஆடுகள்

***மனிதனுக்கு ஏற்படும் உடல் நலப் பிரச்சினையைச் சரி செய்வதில் ஆடுகளுக்கும் பங்குண்டு.***

***வீடுகளில், குழந்தைகளுக்குப் பால் இல்லாத பெற்றவர்கள் கிடைக்கு வந்து, தருமப்பால் பீய்ச்சி வாங்கிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். வயிற்றுக் கோளாறு உள்ள குழந்தைகளுக்கு, வெள்ளாடுகள் வயிற்றினுள்ளிருந்து இழுத்து அசைபோடும் "உதவி"யை எடுத்து, கறந்த பாலுடன் உடனே கலந்து, சங்கால் அந்தக் குழந்தைகளுக்குப் புகட்டிக்கொண்டிருந்தார்கள். ஆட்டுக்காரர்களின் ஒத்தாசையுடன் கண்வலிக்காரர்கள், வெள்ளாட்டம் பாலை, காம்பைப் பிடித்துத் தங்களின் நோயுடைய கண்களில் பீய்ச்சிக்கொண்டிருந்தார்கள்.***

***(மேலது, பக்.11,12)***

என்று கி.ராஜநாரயணன் கரிசல் வட்டார மருத்துவத் தன்மையில் ஆடுகள் பெருமிடத்தைக் குறிப்பிடுவதைக் காணலாம். பெரும்பான்மையான இல்லங்களில் குறிப்பாக கிராமங்களில் உள்ள பலவீடுகளில் மாடு, ஆடுகளின் பசுஞ்சாணத்தை எடுத்து தரையை மொழுகுவது வழக்கம். இன்றும் பல நகர்ப்புறங்களில் சாணப்பொடியாக விற்பனைக்கு உள்ளது. கிடை குறுநாவலில், வீடுகளில் புது அடுப்புப் போட்டவர்கள் அதன்மேல் மெழுகுவதற்கு ஆட்டுச் சாணத்தைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். (மேலது, ப.12) என்ற வெளிப்பட்டு நிற்பதைப் பார்க்க முடிகிறது. தொல்குடிச் சமூகத்திலிருந்து தற்போதைய வாழ்வியல் வரை மனிதர்களுக்கான உணவு உற்பத்தியில் கால்நடைகள் பங்களிப்பு தவிர்க்க இயலாததாகஅமைந்துள்ளதைப்பார்க்கலாம்.

## முடிவுரை

மனிதன் இனக்குழுவாக வாழ்ந்த திணை வாழ்வியலில் வேளாண்மைப் புழக்கத்தில் குறிப்பிட்ட விலங்குகளைப்பயன்படுத்தியதில் ஆடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. ஆடுகள் தாவர உண்ணிகள் என்பதால் அதன் புழுக்கைகள்நிலத்தைச்செழிப்பானவிளைச்சலைத் தரும் நிலமாகப் பண்படுத்துவதில் முக்கியமானதாகிறது. கிடை குறு நாவலில் ஆடுகளைப் பற்றியும் ஆடு மேய்ப்பவர்கள் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார் கி.ராஜநாராயணன். மனிதன் மட்டும் இயற்கையின் அங்கமல்ல. இயற்கையின் வளமைக்கு ஒவ்வொரு உயிர்களின் பங்கும் இன்றியமையாதது. உழவு தலைமைத் தொழில் என்று கூறுகிறார் வள்ளுவர்.

*அத்தலைமைத்துவத்தில் மனிதனுடன் எருது, காளை, ஆடு, பசு என பல்வகைப்பட்ட விலங்குகளும் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமை உண்டு. உலகில் மனிதன் வாழும் வரை உணவு தேவை. உணவுக்கு நிலம் மட்டும்தான் ஆதாரம். அந்நிலத்தை இயற்கை வழிப் பண்படுத்துவதில் ஆடுகளும் பிற கால்நடைகளும் பங்காற்றுகின்றன. மானுடம் இத்தகு மரபுவழிப் பயன்தரும் பண்பாட்டைப் பேண வேண்டும். நிலம், உணவு, மருத்துவம் எனப் பல்வகைப் பயன்பாட்டைத் தரும் கால்நடை வளர்ப்பிளை மேம்படுத்தி கலப்படமற்ற நோய்ப்பெருக்கத்தை ஏற்படுத்தாத ஆரோக்கியமான வாழ்வினை மீட்டெடுப்பதில் ஒவ்வொரு தனி மனிதனும் பங்காற்ற வேண்டும்.*

**துணை நூற்பட்டியல்**

1. *ராஜநாராயணன் கி., கிடை, குறுநாவல், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629001. டிசம்பர் 2017.*
2. *அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, 2004.*
3. *திருக்குறள், பரிமேலழகர் உரை.*